*1974 மார்ச் 18]*

திரு. நா. வீராசாமி: ஏலக்காய் கோடைக்கானல், ஊட்டி போன்ற மலைப் பகுதிகளில் 3,000 அடி, 4,000 அடிக்குமேல் தான் விளையும் என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி என்ற மலையே இருக்கிறது. பண்டைக் காலத்தில் ஏலக்காய் அங்கு நிறைய விளைந்த காரணத்தால் அதற்கு ஏலகிரி என்ற பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இப்போது ஏலக்காய் அங்கு பயிராவதில்லை. அந்த மலை நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்ன மூவாயிரம் அடிக்கு மேல் இருப்பதால், அங்கு ஏலக்காய் பயிரிட சிறப்புத் திட்டத்தை அரசு நிறைவேற்ற முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பெயர் ஏலகிரி என்று இருந்தால் மட்டும் ஏலக்காய் விளைந்துவிடும் என்று நான் நம்பவில்லை. அரசுத் துறையிலிருந்து ஏலக்காய் அங்கு விளைவிக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்து ஏக்கர் ஒன்றுக்கு அதிகமான வருவாய் வருமா என்றும் ஆராய்ந்து பார்த்து அதற்குத் தகுந்த இடமாக இருந்தால் அதைச் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு பகுதியாகிய கன்னியாகுமரிக் காடுகளில் ஏலக்காய் பயிரிடுவதை ஒரு பைலட் ஸ்கீமாக ஒப்புக்கொண்டு செய்ய அரசாங்கம் முன்வருமா? அரசாங்கத் தரப்பிலிருந்து ரப்பர் தோட்டம் கீழ்ப் பகுதியில் போட்டிருக்கிறார்கள். மேல் பகுதியில் ஆராய்ச்சி செய்து ஏலக்காய் பயிரிட முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏலக்காய் விளையும் என்பதில் ஐயம் இல்லை. ஏனென்றால் அங்கு உயரமான மலைகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் விளைவித்து வருகிறார்கள். அதை விட இதிலே அதிக வருவாய் வருமா என்பது ஒரு கேள்வி. ஏலக்காயோடு வேறு பயிர் சேர்த்து பயிர் செய்ய முடியுமா என்றும் பார்க்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் என்ன செய்யமுடியும் என்று ஆராய்ந்து பார்த்து விரிவுபடுத்த முடியுமா என்று சொல்லுகிறேன்.

## சேரன்மகாதேவி ஒன்றியத்தில் உர விநியோகம்.

* 484 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பஞ்சாயத்து யூனியனில் உள்ள விவசாய டிப்போவிற்கு 1972-ம் ஆண்டு, அக்டோபர் முதல் டிசம்பர் வரை எவ்வளவு உரம் வரவழைக்கப்பட்டது?

(இ) அது விவசாயிகளுக்கு எந்த அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) 160 டன் யூரியாவும் 5 டன் கூட்டு உரமும் விநியோகிக்கப்பட்டது.

(இ) கிராம சேவக்குகள் அளித்த கார்டுகளின் அடிப்படையில் ஒரு விவசாயிக்கு 100 கிலோவுக்கு மேற்படாமல் பி.டி.ஓ. முன்னிலையில் விநியோகிக்கப்பட்டது. இது 1972 அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் சேரன்மகாதேவி வட்டத்தில் விநியோகிக்கப்பட்டது.

திரு. சோ. அழகர்சாமி: உரம் விநியோகிக்கப்பட்ட முறையைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 10 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு 100 ஏக்கர் அளவுக்கும், 100 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு 10 ஏக்கர் அளவுக்கும் இந்த உரம் வழங்கப்பட்டிருக்கிறது. இனிமேலாவது உர விநியோகத்தில் மோசமான நிலை ஏற்படாமல் ஒதுக்கக்கூடிய உரம் சீரான முறையில் விநியோகிக்கப்பட அரசு என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி பத்து ஏக்கர் உள்ளவர்களுக்கு 100 ஏக்கர் உள்ளவர்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவு உரம் கொடுப்பதாகச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. 1972 அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை கொடுக்கப்பட்டது இது. இதிலே தவறுகள் நடக்கின்றன என்பது எனக்குத் தெரியும். அதைச் சீர்திருத்தம் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாளைக்கு நான் விளக்கிச் சொல்ல இருக்கிறேன்.

*Road side trees.*

* 485 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) whether the Government have banned the cutting trees on road sides in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) சென்னை மாநகரில் சாலை ஓரங்களில் உள்ள மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கும் வண்ணம் பொதுக் கட்டளைகள் அரசால் பிறப்பிக்கப்படவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. க. நாகராஜன்: இந்தச் சாலை ஓர மரங்கள் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கணக்கெடுக்கப்படுகிறது. அதற்கிடையில் இடைவெளியில் புதிய மரங்கள் முளைத்துவிடுகின்றன.